மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த மாத இறுதிக்குள்ளாக தமிழ்நாட்டிலுள்ள *136* வட்ட மருத்துவமனைகளிலும் இந்த 'ஸ்கேன்' கருவி அமைத்துத் தரப்படும். இன்றைக்கேகூட எல்லா மருத்துவமனைகளுக்கும் வழங்கிவிடலாம். ஆனால் இந்த 'ஸ்கேன்' கருவி பொருத்தப்படுகின்ற நேரத்தில், அந்த அறைகள் குளு குளு வசதி செய்யப்படவேண்டும். நல்ல முறையில் அவை அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக அந்தப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலுள்ள எல்லா வட்ட மருத்துவமனைகளுக்கும் 'ஸ்கேன்' கருவி பொருத்தப்படும். உலக வங்கி உதவியோடு *17* கோடி ரூபாயில் அமைக்கப்படுகின்ற இந்தத் திட்டத்தில், *136* 'ஸ்கேன்' கருவிகள் வாங்குவதற்காக முதலிலே பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் திட்டத்தை அமல் செய்வதற்காக டெண்டர் கோரிய நேரத்தில், இடைப்பட்ட ஓராண்டு காலத்தில், விலைவாசிகள் குறைந்து விட்டன. எனவே, இந்த *17* கோடி ரூபாயில் கூடுதலாக *50* 'ஸ்கேன்' கருவிகள் வாங்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கருவிகளை, நல்ல தரமுள்ள வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகளுக்கு வழங்குவதற்கு அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *109*, திரு. கே. சுந்தர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்.

109--

துணை மின் நிலையம் அமைத்தல்

** 1641*— **திரு. கே. சுந்தர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலவாக்கத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 7]

(அ) இல்லை

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. கே. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலவாக்கம் பகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்திலே அடங்கியுள்ள பகுதி. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பேரவையில், அந்த சாலவாக்கம் தனி ஒன்றியமாகப் பிரிக்கப்படும் என்று அறிவித்து, இப்போது பிரிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையிலே இருப்பதாக அறிகிறேன். சாலவாக்கத்தைச் சுற்றிலும், மதுராந்தகம் வட்டத்தைச் சுற்றியுள்ள பகுதியில் ஏறக்குறைய 10 தொழிற்சாலைகள் இருக்கின்றன. தற்போது, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருப்பதால், ஒரு புதிய துணை மின் நிலையம் அவசியமாகிறது. விவசாயிகளுக்கும் போதுமான மின்சாரம் கிடைக்காத காரணத்தினால், அவர்கள் அவதியுறுகின்றார்கள். எனவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே, துணை மின் நிலையங்கள் அமைப்பது குறித்து, ஏற்கெனவே அரசு பரிசீலித்திருக்கிறது. ஆனால், சாலவாக்கத்தில் துணை மின் நிலையம் அமைக்க, இப்போது எந்தவிதமான திட்டமும் இல்லை. 1997-98 முதல் 2001-2002 முடிய, ஐந்தாண்டுக் கால திட்டத்திலே, மின்சாரம் செலுத்துதல் மற்றும் பகிர்மானத்திற்கான பெருந்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் பணிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; அப்போது, தேவைப்பட்டால், சாலவாக்கத்திற்கும் துணை மின் நிலையம் அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.